LIBRARY
6 - JUL 1963
STATE ... STATUTE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 7th March 1963.

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

பள்ளிச்சீருடை வழங்கல்

*143 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து** : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியில் இம்மாதம் கனம் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட பள்ளிச்சீருடை வழங்கும் நிகழ்ச்சியில் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சீருடைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு ?

(இ) அதற்கு அரசாங்கத்தின் நிதி உதவி எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) தோராயமாக ரூ. 1,36,165 என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

(இ) அரசாங்க உதவி இல்லை.

(*a*) The value has been estimated at Rs. 1,36,165 approximately.

(*b*) Nil.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளிலுள்ள மாணவர்களுக்கும் ஒரேவிதமான சீருடையை ஏற்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனியார் ஏதாவது ஒரு திட்டம் தயாரித்து அதற்கு உதவி அளிப்பதற்கு முன்வந்தால், அவ்வாறு சீருடை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்பொழுது இது விஷயத்தில் அரசினர் ஒன்றும் உதவுவதாக இல்லை. கூடியவரையில் மாணவர்கள் ஒரேமாதிரி ஆடை அணியவேண்டும் என்பதுதான் திட்டம். அந்தந்தப் பள்ளியிலாவது ஒரேமாதிரியான உடை அணியவேண்டும் என்று திட்டம் நடைபெறுகிறது. ஒரு பள்ளியைப் பார்த்து அதேமாதிரி மற்றொரு பள்ளியும் பின்பற்றிக்கொண்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : நீதிபதிகள், வழக்கறிஞர்கள், காவல் துறையினர் போன்றவர்களுக்குத் தனியாகச் சீருடை வழங்கப்பட்டு மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதைப்

போன்று, மாணவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட ஆசிரியர்களுக்கு என்று தனியாக சீருடை வழங்குவதற்குத் திட்டம் அரசினரிடத்தில் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்தலம் : அதைப்பற்றி அரசினரிடத்தில் திட்டம் ஒன்றும் இல்லே. ஆனல் இப்பொழுது அரசாங்க அதிகாரிகள் அம்மாதிரி செய்யவேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். அவ்வாறு மக்களுடைய உதவியைக் கொண்டு ஆசிரியர்களும் இப்பொழுது சீருடை அணிந்துகொண்டு வருகிறார்கள். எல்லா ஆசிரியர்களும் குறிப்பிட்ட ஒரு சீருடையை அணிய ஏற்பாடு செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. சி. பொன்னுசாமி : பள்ளி மாணவர்களுக்கு அந்த யூனிபாரம் உடையில் இந்திய யூனியன் கொடியின் சின்னத்தை குத்துவதற்கு ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சின்னத்தை உடையிலே குத்திக்கொண்டால்மட்டும் போதாது. அவரவர்கள் மனதிலும் இருக்கவேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் நமது நாட்டினுடைய தேசீய கீதம் நல்ல முறையில் பாடப்படவேண்டும். அதை நன்ருகச் சொல்லிக்கொடுக்கவேண்டும். நாட்டைப்பற்றி பள்ளிப் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். அதெல்லாம் இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சீருடை வழங்கும் திட்டத்திற்கு அரசாங்கம் ஏதாவது பணம் செலவழிக்கிறதா ? அப்படியில்லை என்றால், அரசாங்கம் பணம் செலவு செய்து பள்ளிக்கூடம் போகும் எல்லாப் பிள்ளைகளும் ஒரேமாதிரியான உடை அணிவதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே விடை அளித்தேன். இப்பொழுது அரசாங்கம் ஒன்றும் உதவி அளிப்பதற்கில்லே. அரசாங்க உதவி இல்லாமல் இதை எவ்வளவு தூரம் பரவச் செய்யவேண்டுமோ அவ்வாறு பரவச் செய்ய வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

Sri Renganathar temple, Srirangam

* 144. *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon the Minister for Finance be pleased to state—

(*a*) the total annual income for 1961–62 of Sri Renganathar temple, Srirangam; and

(*b*) the total expenditure for the year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 5,68,344 during Fasli 1371 i.e., from 1st July 1961 to 30th June 1962.

(*b*) Rs. 4,50,913 during Fasli 1371 i.e., from 1st July 1961 to 30th June 1962.